**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**<u>அசல் வழக்கு எண். 652 /2021</u>**

2025- ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 – ஆம் நாள் திங்கள்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிவண்ணன் | தொழில் | : | ஆசிரியர் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | பொன்னுசாமி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | அத்தியூர் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 54/2025 |

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** தொடர்ச்சி :– (வாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன்பேரில் பிரதிவாதி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.)

1) நான் ஆசிரியராக புதுபேட்டையில் பணிபுரிந்து வருகிறேன். நான் ஆசிரியர் பயிற்சி வகுப்பை நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் படித்தேன். நான் 2000–2002 ஆம் வருடம் படித்தேன். நான் படித்து முடித்தவுடன் வெளிநாடு சென்றுவிட்டேனா என்றால் ஊரில் தான் இருந்தேன். நான் வெளிநாட்டில் 1995 முதல் 1999 ஆம் வருடம் வரை இருந்திருப்பேன். சரியாக ஞாபகம் இல்லை. பாஸ்போர்ட் எனது வீட்டில் உள்ளது. தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் பாஸ்போர்டை காட்ட முடியும். நான் ஆசிரியர் தகுதி தேர்வு எழுதினேனா என்றால் நான் படித்த போது தகுதி தேர்வு கிடையாது. நான் வெளிநாட்டில் இருந்த போது தகுதி தேர்வு நடந்தது என்றாலும், நான் வேறு நபரை வைத்து தகுதி தேர்வு எழுதினேன் என்று சொன்னால் சரியல்ல.

2) எனது சித்தப்பா அய்யாதுரை என்பவருக்கு 21.10.1995 ஆம் தேதி வெளிநாட்டில் இருந்து கடிதம் அனுப்பினேனா என்றால் எனக்கு நினைவில்லை. அந்த கடிதத்தில் 07.11.1995 ஆம் தேதி சென்னை விமான நிலையத்திற்கு வந்துவிடுவதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. எனது கொள்ளுதாத்தாவின் பெயர் பழமலை நாயனார். பழமலை நாயனாரின் அப்பா பெயர் சோனாசலன் நாயனார். சோனாசல நாயனாருக்கு எத்தனை மகன்கள் என்றால் பழமலை நாயனார், முத்துலிங்கம் ஆகியோர் வாரிசு ஆவார்கள். பழமலை நாயனாருக்கு சோனாசலம் மற்றும் அண்ணாமலை ஆகியோர் வாரிசுகள். சோனாசலம் என்பவருக்கு இரண்டு பிள்ளைகள் அசலாம்பாள் மற்றும் சாலையம்மாள் ஆகியோர் வாரிசுகள். அசலாம்பாளின் கணவர் பெயர் மகாலிங்கம் ஆகும். அசலாம்பாளுக்கு 6 பிள்ளைகள் மனோரஞ்சிதம், மீனாம்பாள், அமராவதி, ஆனந்தராஜ், செல்வராஜ், துரைராஜ் ஆகியோர்

வாரிசுகள். சாலையம்மாளின் கணவர் பெயர் முத்து. சாலையம்மாளுக்கு குழந்தைகள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

3) அண்ணாமலை என்பவர் எனது தாத்தா என்றால் சரிதான். அண்ணாமலைக்கு 3 ஆண் 3 பெண்பிள்ளைகள் ஆவார்கள். ஜெகதாம்பாள், பொன்னுசாமி, சிற்றம்பலம், உண்ணாமலை, தெய்வமணி மற்றும் அய்யாதுரை ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். அண்ணாமலையின் பெண்பிள்ளைகள் அனைவரும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பெண்பிள்ளைகள் அனைவரும் எங்களது தாத்தா சொத்தில் பங்கு எதுவும் வேண்டாம் என்று விட்டுக் கொடுத்துவிட்டதாக எனது அப்பா எங்களிடம் சொல்லியுள்ளார். அய்யாதுரை எனது சித்தப்பா என்றால் சரிதான். சிற்றம்பலம் எனது நடு அப்பா என்றால் சரிதான். தாவா சொத்து சோனாசலம் நாயனார் மகன் பழமலை நாயனார், முத்துலிங்க நாயனார், வைத்திலிங்கம் மகன் திருவண்ணாமலை நாயனார் ஆகியோருக்கு 22.08.1932 ஆம் தேதி கிரய பத்திரம் மூலம் பாத்தியம் என்று சொன்னார் சரிதான்.

4) தற்போது வழக்கு சொத்தின் பழைய சர்வே எண். 88/7 புதிய சர்வே எண். 88/7 இ என்றால் சரிதான். சர்வே எண். 88/7-ல் ஏக் 0.30 செண்டில் ஏக் 0.9 செண்ட் பழமலை நாயனாருக்கு வாய்மொழியாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பழமலை நாயனாருக்கு ஒதுங்கிய 9 செண்டில் அவரது வாரிசுகளான சோனாசலம் மற்றும் அண்ணாமலைக்கு தலா 0.4 1/2 செண்ட் வாய்மொழியாக பிரிக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சோனாசல நாயனாருக்கு பிரிந்த 0.4 1/2 செண்டில் அவரது வாரிசுகளான அசலாம்பாள் மற்றும் சாலையம்மாள் தலா 0.2 1/4 செண்ட் வீதம் வாய்கறாராக பிரித்துக் கொண்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அசலாம்பாள் என்பவருக்கு பிரிந்த 0.2 1/4 செண்ட் நிலத்தை அவருடைய வாரிசுகளான சிற்றம்பலம் மனைவி மனோரஞ்சிதம் மற்றும் அய்யாதுரை மனைவி மீனாம்பாள் ஆகியோருக்கு 08.06.1979 ஆம் தேதியில் தாவா சொத்தான சர்வே எண். 88/7- 0.30 செண்டில் 2 1/4 செண்ட் நிலத்தையும் இதர சொத்துக்களையும் சேர்த்து இனாம் சாசனம் செய்து சுவாதீனம் கொடுத்துவிட்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் மேற்படி விபரம் தெரிந்துக் கொண்டேன்.

5) சோனாசலம் மகள் சாலையம்மாளுக்கு பிரிந்த 0.2 1/4 செண்ட் நிலத்தை நான் மைனராக இருந்த போது எனது தந்தை பொன்னுசாமி என்பவரை கார்டியனாக காண்பித்து 29.01.1979 ஆம் தேதி 0.2 1/4 செண்ட் நிலத்திற்கு பதிலாக 0.2 1/2 செண்ட் நிலம் என குறிப்பிட்டு இனாம் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். எனது தாத்தா அண்ணாமலை என்பவருக்கு பிரிந்த சர்வே எண். 88/7-ல் 0.4 1/2 செண்ட் நிலத்தை பொன்னுசாமிக்கு 0. 1 1/2 செண்ட், சிற்றம்பலம் 0.1 1/2 செண்ட் அய்யாதுரை 0.1 1/2 செண்ட் என 27.05.1982 ஆம் தேதியில் பஞ்சாயத்து முச்சலிக்கா மூலம் பிரித்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு 29.01.1979 ஆம் தேதி 0.2 1/4 செண்ட் நிலமும், எனது அப்பாவிற்கு பாகம் மூலம்

பிரிந்த 0.1 1/2 செண்ட் நிலமும் சேர்த்து 0.3 3/4 செண்ட் நிலம் எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

6) சிற்றம்பலம் மனைவி மனோரஞ்சிதம் என்பவருக்கு தாவா சொத்தில் 08.06.1979 ஆம் தேதியில் இனாம் சாசனம் மூலம் கிடைத்த 0.01 செண்ட் நிலமும், சிற்றம்பலம் பாகத்திற்கு 27.05.1982 ஆம் தேதியில் பாகம் முச்சலிக்கா மூலம் கிடைத்த 0.1 1/2 செண்ட் நிலமும் சேர்த்து சிற்றம்பலம் குடும்பத்திற்கு 0.2 1/2 செண்ட் நிலம் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. மீனாம்பாளுக்கு தாவா சொத்தில் இனாம் சாசனம் மூலம் 08.06.1979 ஆம் தேதியில் இனாம் சாசனம் மூலம் கிடைத்த 0.01 1/4 செண்ட் நிலமும், அய்யாதுரை பாகத்திற்கு 27.05.1982 ஆம் தேதியில் பாகம் முச்சலிக்கா மூலம் கிடைத்த 0.1 1/2 செண்ட் நிலமும் சேர்த்து அய்யாதுரை குடும்பத்திற்கு 0.2 3/4 செண்ட் நிலம் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா பொன்னுசாமிக்கு 27.05.1982 ஆம் தேதிய பாக முச்சலிக்காப்படி கிடைத்த 0.1 1/2 செண்ட் நிலம் மட்டுமே எனது பெயரில் ஆவணம் எழுதி வைக்க அவர்களுக்கு உரிமை இருந்தது என்றாலும், 02.02.2018 ஆம் தேதி தாவா சொத்தில் 0.09 செண்ட் நிலத்தை எனது பெயருக்கு எழுதி வைக்க உரிமையில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

7) யூ.டி.ஆர் சமயத்தில் பட்டாவில் ஏற்பட்ட தவறை வைத்துக் கொண்டு எனது அப்பா 0.09 செண்ட் நிலம் தொடர்பாக 02.02.2018 ஆம் தேதி தவறான ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 02.02.2018 ஆம் தேதி ஏற்பட்ட கிரயப்பத்திரம் செல்லாது என்று எனது சித்தப்பா அய்யாதுரை 2019 ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கும், எனது அப்பாவிற்கு சேர்ந்து 0.3 3/4 செண்ட் மட்டுமே பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. மனோரஞ்சிதம் மற்றும் மீனாம்பாள் ஆகியோருக்கு 08.06.1979 ஆம் தேதியில் தாவா சொத்து பொறுத்து எழுதி வைத்த இனாம் சாசனத்தை ரத்து செய்ய நானோ எனது தந்தையோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் மேற்படி இனாம் சாசனம் பத்திரம் பற்றி நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் எனக்கு தெரிய வந்தது.

8) 29.01.1979 ஆம் தேதியிட்ட இனாம்சாசனம் 08.06.1979 ஆம் தேதியிட்ட இனாம் சாசனத்தை மறைத்து எனது தந்தை 02.02.2018 ஆம் தேதியில் எழுதப்பட்ட கிரய பத்திரம் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. சம்மந்தப்பட்ட சர்வே எண்ணில் உள்ள இடத்தை 40 வருடமாக நாங்கள் தான் தொடர்ந்து அனுபவம் செய்து வருகிறோம். தாவா சொத்தில் அய்யாதுரை அவரது மனைவி மீனாம்பாள், சிற்றம்பலம் மற்றும் சிற்றம்பலம் மனைவி மனோரஞ்சிதம், எனது தந்தை பொன்னுசாமி மற்றும் நான் ஆகியோர் கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. எனது நடுதந்தை சிற்றம்பலம் தாவா சொத்தையும், இதர சொத்துக்களையும் பாகம் பிரித்து கொடுக்க சொல்லி எனது அப்பாவிற்கு வழக்கறிஞர் அறிவிப்பு 27.04.2011 ஆம் தேதி அனுப்பியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தாத்தா

அண்ணாமலை எனது அப்பாவிற்கு எந்த ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான்.

9) பொன்னுசாமி, சிற்றம்பலம், அய்யாதுரை ஆகியோர் சேர்ந்து பாக பத்திரம் எழுதி பதிவு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். வாய்கறாராக பிரித்துக் கொண்டதாக கேள்விப்பட்டேன்.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMOJMCOURT, KUNNAM